50

# வெற்றிகரமான நுழைவு

## (21:1-11)

இந்த அதிகாரத்திலிருந்து மத்தேயுவில் பாரம்பரியமாக அழைக்கப்படும் "பாடுபடுதலின்" வாரம் துவங்கி, கிறிஸ்துவின் வாழ்க்கையின் கடைசி முழு வாரத்துடன் சிலுவையில் அறையப்படும் நிகழ்ச்சி வரை செல்லுகிறது.[1] (உணர்ச்சிகரமான எனும்) இப்பதம் லத்தீன வார்த்தையான *passio*, என்பதிலிருந்து வந்தது, இதன் பொருள் "பாடுபடுதல்." இந்த வார்த்தை பெரும்பாலும் இரத்த சாட்சிகளாய் மரிப்போர்களுக்குப் பயன்படுத்தும் வார்த்தையாக இருந்துள்ளது. புதிய ஏற்பாட்டை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தபோது, *passio* எனும் இப்பதம் இயேசுவின் பாடுகளையும் அதைத் தொடர்ந்து வரும் நிகழ்வுகளையும் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்பட்டது.[2] இந்த வாரத்தின் குறிப்பிடத்தக்க இயேசுவின் வாழ்க்கைக் குறிப்பை எழுத சுவிசேஷ எழுத்தாளர்கள் அதற்கென்று (எழுத) எடுத்துக் கொண்டுள்ள இடமே தெளிவாகக் காட்டுகிறது. 25 லிருந்து 48 சதவீதம் வரையிலான இடம் சுவிசேஷங்களில் இதற்கென கொடுத்து எழுதப்பட்டுள்ளது.[3]

இந்த அதிகாரம் எருசலேமில் இயேசுவின் ஊழியத்தில் ஒரு மாறுதலைக் குறிக்கிறது. வெற்றிகரமாக அவர் எருசலேமில் நுழைந்ததைத் தொடர்ந்து (21:1-11), மேசியா என்ற ரீதியில் இயேசுவின் அதிகாரம் பற்றிய சிறப்புக் கூறுகளை குறிப்பிடுகிறது. அவர் தேவாலயத்தை சுத்திகரித்தார் (21:12, 13), மற்றும் குருடர்களையும் சப்பாணிகளையும் சொஸ்தமாக்கினார் (21:14-17). யூதர்கள் மீது வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை விளங்கச் செய்யும் பொருட்டு, கனி கொடாத அத்திமரத்தை அவர் சபித்து இலைகளை உதிரச் செய்தார் (21:18-22). யூதமத தலைவர்கள், இயேசுவை குற்றம் பிடிக்க வகை தேடி, அவருடைய அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார்கள் (21:23-27). அவர்களுக்கு பதிலளித்து, இரண்டு உவமைகளை அவர்களுக்கு எதிராகச் சொன்னார்: திராட்சத் தோட்டமும் இரண்டு குமாரர்களையும் பற்றிய உவமை (21:28-32) மற்றும் வீட்டெஜமானும் திராட்சத்தோட்டமும் பற்றிய உவமை (21:33-46).

வாரத்தின் முதல் நாளில், ஞாயிற்றுக்கிழமை, மகிமையின் ராஜா எருசலேமுக்குள் வந்தார். அவர் தாழ்மையுள்ளவராய், கழுதையின் மேல் சவாரி செய்து, பட்டணத்தை நெருங்கினார். அவர் பஸ்காவுக்கு ஆறுநாள் இருக்கையில், நிஷான் மாதம் எட்டாம் நாள் பெத்தானியாவில் வந்து சேர்ந்தார் (யோவான் 12:1), மற்றும் அடுத்தநாள் அவர் பட்டணத்துக்குள் நுழைந்தார். இந்த நேரத்தில், எருசலேமிலும் சுற்றுப் புறத்திலும் இருபது லட்சம் ஜனங்களுக்கு மேல் கூடிவந்திருக்கக்கூடும்.[4]

*இயேசு இதற்கு முன்பு தம்மை மேசியா என்று யாருக்கும் சொல்லாதபடிக்கு அமைதியாக இருக்கும்படி பணித்திருந்தார் (12:16; 16:20; 17:9), இதற்குப் பின்பு எவ்விதத்திலும் இரகசியமாக அதை வைக்கவில்லை. இதுதான் முதல் முறையாகவும் ஒரே முறையாகவும் இயேசு திட்டமாக ஜனங்கள் தம்மிடம் கவனம் செலுத்தத்தக்கதாக பொது ஜனங்களுக்கு முன்பாக தம்மை விளங்கப் பண்ணினார். பட்டணத்தில் நுழையும்போது நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றியும் யூதமதத் தலைவர்கள் அவருக்கு விரோதமான தங்களுடைய திட்டங்களை செயல்படுத்தவும் ஏதுவாக்கியது.*

*வெற்றிகரமான நுழைவு பற்றிய கதை சத்தியத்தையும் புறந்தள்ளுதலையும் கலந்திருந்தது. இயேசு துவக்கத்தில் நல்லதொரு வரவேற்புடன் எருசலேமுக்குள் தாவீதின் குமாரனென்றும், இஸ்ரவேலின் மேசியா என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டார், ஆனால் பின்னதாக, அவர் அப்படிப்பட்டவராக ஏற்றுக் கொள்ளப்படாமல் ஜனங்களால் புறந்தள்ளப்பட்டார். அவர் ராணுவத்தைக்கொண்டு தங்கள் எதிரிகளை ஒடுக்கி வெற்றி தருபவராக இருப்பார் என்று நம்பினார்கள். இயேசு அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஒத்துவரக் கூடியவராயிராதபடியால், அவருக்கு ஆதரவளிப்பதை விட்டு விட்டார்கள். ரோமர்களிடமிருந்து தங்களைக் காக்கும்படி அழுதார்கள், ஆனால் பின்னர், மதத்தலைவர்களோடு சேர்ந்து கொண்டு, ரோமர்களை அழைத்து அவரைச் சிலுவையில் அறையச் சொன்னார்கள், இப்படியாக வாழ்த்துக்களோடும் புறந்தள்ளுதலோடும், வெற்றிகரமான நுழைவு "பாடுகளைப்படும் செயல்களுக்கு ஒரு முன்னுரையாக" அமைந்துள்ளது.[5]*

## *ஆயத்தம் (21:1-7)*

***1அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி,***

***2உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்: அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள்.***

***3ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்.***

***4இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்.***

***5தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.***

***6சீஷர்கள் போய், இயேசு தங்களுக்கு கட்டளையிட்டபடியே செய்து,***

***7கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள் மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்.***

***வசனம் 1. இயேசுவும்** அவருக்குப் பின் சென்றோரும் எரிகோவை விட்டுப் புறப்பட்டார்கள் (20:29) பிறகு பெத்தானியாவுக்கு வந்து அன்று இரவு அங்கே*

தங்கினார்கள் (யோவான் 12:1). பெத்தானியா என்பது "அத்திப் பழங்கள் வீடு," என்றழைக்கப்பட்டது, அது லாசரு மற்றும் அவருடைய இரண்டு சகோதரிகளான மார்த்தாள் மரியாள் ஆகியோரின் ஊர் (யோவான் 11:1; 12:1). அது கிழக்கு ஒலிவமலைச் சரிவில் அமைந்திருந்தது, எருசலேமுக்கு கிழக்கில் இரண்டு மைல் துலைவில் இருந்தது (யோவான் 11:18).

மறுநாள், இயேசுவும் அவருடைய சீஷர்களும் **எருசலேமுக்குப்போக** ஆயத்தமானார்கள். மத்தேயுவின் இந்தக் குறிப்பு வரை, பரிசுத்த நகரம் சில இடங்களிலே மட்டுமே குறிப்பிடப்பட்டது. சாஸ்திரிகள் அங்கே போய் குழந்தையாகிய கிறிஸ்துவினிடத்தில் போய்ச்சேர விவரம் கேட்டுத் தேடினார்கள் (2:1). எருசலேமில் இருந்தவர்கள் யோவான் ஸ்நானனை வனாந்தரத்தில் காணும்படி போனார்கள் (3:5), பின்னதாக இயேசுவை, கலிலேயாவுக்குத் தேடிப்போனார்கள் (4:25). யூதமதத் தலைவர்கள் அவரை அவதிமதிக்கும்படியாக எருசலேமிலிருந்து பயணம் பண்ணிப் போனார்கள் (15:1, 2). ஆயினும், இயேசு இந்தப் பட்டணத்திற்கு இதற்கு முன்பு போனார் என்று மத்தேயு குறிப்பிடுவதில்லை. (எருசலேமுக்கு அவர் போன விவரம் அறிய ஒருவர் யோவான் புத்தகத்தைக் கொண்டு ஆலோசிக்க வேண்டும்.) இருப்பினும் இயேசு தமது உணர்ச்சிகரமான தீர்க்கதரிசனங்களை முன் சொன்னபோதெல்லாம் எருசலேமை அவர் குறிப்பிட்டிருக்கிறார் (16:21; 20:17; 18). பட்டணத்துக்கு அவர் வருகை தருவது அவருடைய சொந்த தீர்க்கதரிசனம்.

பெத்தானியாவை விட்டபின், இயேசுவும் அவருக்குப் பின் செல் வோரும் பெத்பகேயுக்கு வந்தார்கள், **பெத்பகேயு** என்றால் "பழுக்காத அத்திக் காய்களின் [பழுப்பதற்கு முந்தியநிலை] வீடு" என்று பொருள், இதன் மிகச் சரியான இடம் அறியப்படாதிருக்கையில், இது பெத்தானியாவுக்கும் எருசலேமுக்கும் இடையிலே அநேகமாக இருந்திருக்கக்கூடும்.

**ஒலிவ மலை என்பது எருசலேமுக்கு கிழக்கே** தேவாலயம் இருந்த மலைக்கு மேல் சுமார் 250 அடிக்கு மேலேயும் கடல் மட்டத்திலிருந்து அதன் உச்சி 2,600 அடிவரை உயர்ந்தும் (உச்சக்கட்ட உயரத்தில்) அமைந்திருந்த பகுதி ஆகியவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பெயர்கள். இந்த மலை உச்சியிருந்து ஒருவர், தனது முதல் கணநேர கண்ணோட்டத்தைச் செலுத்தி அந்த பட்டணத்தின் கம்பீரத் தோற்றத்தை ரசிக்கமுடியும் (லூக்கா 19:41). மலையானது வடக்கு தெற்காக சுமார் இரண்டுமைல் நீளமுடையதாக இருந்தது, அதிலே நான்கு உச்சி முகடுகளும், ஆரேம் என்றும், பரமேறிய பர்வதம் என்றும், தீர்க்கதரிசிகளின் மலை, குற்றச்சாட்டின் மலை என்றும் அறியப்பட்டது. இரண்டாம் மூன்றாம் உச்சி முகடுகள், ஆழமற்ற பள்ளங்களால் மட்டும் பிரிக்கப்படுகிறதும், அவைகள் ஒன்றாக "சரியான ஒலிவமலை"[6] என்றும் அழைக்கப்பட்டது. எருசலேமுக்கும் பெத்தானியாவும் இடையேயான பாதை மத்திய புள்ளியிலிருந்து சுற்றி வளைந்து சென்றது.

**வசனம் 2.** இந்தக் கூட்டம் பெத்பகேயை நெருங்கின போது, இயேசு தமது இரண்டு சீஷர்களை ஊழியம் செய்ய அனுப்பி, அந்த மனுஷர்களிடம், **உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்** என்று சொன்னார். இந்தக் கட்டளையை, "உங்களுக்கு முன்பாக இருக்கிற கிராமத்துக்குள் போங்கள்," (NRSV; JNT) என்று சொன்னதாகவும் மொழிபெயர்க்கலாம்.

எதிரிலிருந்த இடம் பெத்பகேயுவா அல்லது வேறொரு இடமா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

பிறகு இயேசு சொன்னார், **போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள்.** மாற்கும் லூக்காவும் ஒரு கழுதைக் குட்டியை மட்டும் குறிப்பிடுகின்றனர் (மாற்கு 11:2; லூக்கா 19:30). இந்த விடுபடுதல் சந்தேகத்துக்குரியதல்ல, ஏனெனில் இயேசு பட்டணத்துக்கு ஏறிச் சென்ற மிருகம் குட்டிதான். கழுதைக்குட்டி மனுஷர் ஒருவரும் ஏறியிராத ஒன்றாக இருந்தது எப்படி என்று சொல்லுகின்றனர் (மாற்கு 11:2; லூக்கா 19:30). தாய் (கழுதை) ஆரவாரச் சத்தமிடும் கூட்டத்தின் இரைச்சலில் (குட்டி மிரண்டுவிடாதபடி) அமைதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு சக்தி.

**வசனம் 3.** அந்த இரண்டு சீஷர்களிடத்திலும் இயேசு **எவனாகிலும்** அவர்களிடம் ஏதாகிலும் கேள்வி கேட்டால், என்ன சொல்ல வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார். முன்பின் தெரியாத ஒரு புதிய நபர் ஒரு கிராமத்துக்குள் நுழைந்து பிரச்சனை (எதிர்ப்பு) இல்லாமல் ஒருவருடைய கழுதையை அவிழ்த்துக் கொண்டு போவது வழக்கத்துக்கு எதிரான செயல்.[7] சீஷர்கள் **இவைகள் ஆண்டவருக்குத் தேவை** என்று சொல்லும்படி சொல்லப்பட்டார்கள். அவைகளுக்கு உரியவர்கள் (லூக்கா 19:33) அவ்வளவு சுலபமாக அந்த மிருகங்களை அந்த மனிதர் அவிழ்த்துக் கொண்டு போக விட்டது ஏன் என்று நமக்கு விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை, அவர்கள் இயேசுவை ஏற்கனவே அறிந்தவர்களாயும் ஒருவேளை அவர்கள் அவருடைய சீஷர்களாகக் கூட இருந்திருக்கலாம் - "ஆண்டவருக்கு" என்று குறிப்பிடப்படுவதால் இப்படி சிந்திக்கப்படுகிறது. இந்தக் கழுதைகள் இயேசுவால் பயன்படுத்தப்படுவதற்கு முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடும். லியோன் மோரீஸ் சிந்தனையில் இயேசு சொன்னவைகள் "முன்னமே பேசி ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு குறிப்பாக இருக்கலாம்" என்றார்.[8]

**வசனம் 4.** இயேசுவின் எருசலேமின் நுழைவு வெளிப்படையான உருவகங்களை உள்ளடக்கியிருந்த நிகழ்ச்சிகளாகும். யூதர்கள் வழக்கமாக கழுதைகளை ராஜரீக காரியங்களுடன் இணைத்துக் குறிப்பிடுவார்கள். அவர்களுடைய ராஜாக்களும், வெற்றிசிறப்போடும் கழுதைகள் மேலும் கோவேறு கழுதைகள் மேலும் ஏறி பயணம் பண்ணுவார்கள் (மாற்கு 11:2; லூக்கா 19:30). குதிரைகளுக்கு எதிரான, கழுதைகளில் பயணித்தல் மூலம் ராஜா சமாதானத்துடன் வருகிறார் என்று அடையாளப்படுத்துகிறது (காண்க நியாயாதிபதிகள் 5:10; 1 இராஜாக்கள் 1:33). எருசலேமுக்குள் இப்படிப்பட்ட முறையில் பயணம் பண்ணி நுழையக் காரணம், ஜனங்கள் மனதில் நல்லெண்ணத்தை உருவாக்கவும், இயன்ற வரை, தமது இராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பை வெளிப்படுத்தவுமே. இயேசு உண்மையில் "சமாதான பிரபுவாக" வந்தார் (ஏசாயா 9:6).

இயேசுவாகிய ராஜா சாந்தகுணமுள்ளவராய் எருசலேமுக்குள் நுழைந்த போது, கழுதையின் மேல் ஏறி பயணம் பண்ணி, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை அவர் நிறைவேற்றினார். இந்த உண்மை மத்தேயுவில் பொதுவான நியமனமாக உள்ளது: **தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது** (காண்க 1:22; 2:15, 17, 23; 4:14; 8:17;

*12:17; 13:35; 26:56; 27:9). "தீர்க்கதரிசி" இங்கே குறிப்பிடப்படவில்லை. ஆகிலும், சில பூர்வீக ஆதாரங்கள் "சகரியா" என்று குறிப்பிடுகின்றன, மற்றவர்கள் "ஏசாயா" என்பதாகச் சொல்லுகின்றனர்.*[9]

***வசனம் 5.*** *இந்த மேற்கோள் வசனம் ஏசாயா 62:11 மற்றும் சகரியா 9:9ன் தொகுப்பாக இருக்கலாம்.*

> *" 'இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய்,*
> *கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய*
> *மறியின் மேலும் ஏறிக்கொண்டு,*
> *உன்னிடத்தில் வருகிறார்' என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்."*

*யூதர்களின் பொதுவான பழக்கம் என்னவெனில் ஒத்தகருத்துள்ள இரண்டு தீர்க்கதரிசனங்களை ஒன்றாக்கி குறிப்பிடுவார்கள்.*[10] *"நீங்கள் சீயோன் குமார்த்தியை நோக்கி" என்பது ஏசாயா 62:11 லிருந்து எடுக்கப்பட்டது. இதே வார்த்தைகள் சகரியா 9:9ல் "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு" என்று துவங்குகிறது. தீர்க்கதரிசனத்தில் மேற்கோள் காட்டிய எஞ்சிய பகுதியில் குறிப்பிடப்படும் வருகின்ற ராஜாவைப் பற்றிய வாசகங்கள் இந்த இரண்டாவது வசனப்பகுதியால் வருகிறது.*

*"சீயோன் குமாரத்தியே" எனும் இந்த விளக்கச் சொல் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி எருசலேமைக் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது (சங்கீதம் 9:14; ஏசாயா 37:22; எரேமியா 4:31; புலம்பல் 1:6). அது பட்டணத்தில் குடியிருப்போர்களையும் குறிப்பிடக் கூடும். அது துவக்கத்தில், எபூசியரின் கோட்டையாக இருந்தது, தாவீதால் பிடிக்கப்பட்டு "தாவீதின் நகரம்" என பெயர் பெற்றது (2 சாமுவேல் 5:7). அது அவருடைய அரண்மனைக்குரிய இடமாகும் (2 சாமுவேல் 5:11). உடன்படிக்கைப் பெட்டியை தாவீது எருசலேமுக்குக் கொண்டு வந்த போது, இங்கே தான் வைத்தார் (2 சாமுவேல் 6:12). பிற்பாடு, சாலொமோன் தாவீதின் நகரத்திலிருந்து வடக்கே தேவாலயத்தைக் கட்டி, உடன்படிக்கைப் பெட்டி அங்கே கொண்டு போய் வைக்கப்பட்டது (1 இராஜாக்கள் 8:1). எனவே "சீயோன்" எனும் பெயர் தேவாலயம் இருந்த பர்வதமாகவும் பேசப்படுகிறது (சங்கீதம் 74:2). இந்தப் பதம் பின்பு முழுபட்டணத்துக்கும் உபயோகப்படுத்தப்பட்டது (சங்கீதம் 48).*

*சகரியா 9:9 பின்பு எருசலேமுக்கு வரவிருந்த ராஜாவைப் பற்றி முன்னுரைத்த தீர்க்கதரிசனமாகும். அவர் "சாந்தகுணம்" (*praus*) அல்லது "பணிவுள்ளவராக" வருவார் என்று விவரிக்கப்படுகிறார் (காண்க 5:5; 11:29 க்கான விளக்கவுரை). சமாதானமான அவரது நுழைவு இரதங்களோடும், சண்டைக் குதிரைகளோடும், யுத்த வில்லோடும் இல்லாமல் மாறுபட்டிருந்தது (சகரியா 9:10). மத்தேயு புத்தகத்தில் விடப்பட்டிருந்தாலும், தீர்க்கதரிசனம் அவரை "நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவருமாக" விவரிக்கிறது.*

***வசனம் 6.*** *இயேசு மகிமையடையும் வரை அவர்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும் (யோவான் 12:16), அந்த இரண்டு* **சீஷர்களும் போய், இயேசு தங்களுக்கு கட்டளையிட்டபடியே செய்தார்கள்.** *கழுதைகளை அவிழ்க்கச் சென்றபோது, அவர்கள் "அங்கே நின்று கொண்டிருந்த சிலரால்" எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டனர் (மாற்கு 11:5). அவர்கள் கழுதைக்குட்டிக்கு "உரிமையாளர்கள்" என்று லூக்கா 19:33ல் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.*

*சீஷர்கள் அந்த உரிமையாளர்களிடம் “அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொன்னார்கள் (21:3), உடனே அவர்கள் அனுமதியளித்து அந்த மிருகங்களைப் பயன்படுத்திக் கொள்ளச் சொன்னார்கள் (மாற்கு 11:6; லூக்கா 19:34).*

***வசனம் 7.*** *சீஷர்கள்* ***கழுதையையும் அதன் குட்டியையும் இயேசுவிடம் கொண்டு வந்தார்கள்.*** *ஒரு பெண் (தாய்) கழுதையை அதன் மறியினிடத்திலிருந்து பிரிப்பது வழக்கமல்ல.*[11] *அவைகளுக்குச் சேணமில்லாதபடியால், சீஷர்கள்* ***தங்கள் வஸ்திரங்களை அவைகள் மேல் போட்டார்கள்.*** *இதை கிரேக்க வார்த்தையில் (himation), பன்மை வார்த்தையில் சொல்லும் போது, பொதுவாக அதைத் துணிகள் என்று சொல்லலாம். எப்படியிருப்பினும், இந்தப்பதம் பெரும்பாலும் “தளர்த்தியான மேல் அங்கியையே” குறிக்கும். சீஷர்கள் தங்களின் வெளிப்புற அங்கிகளினால், கழுதைக் குட்டியையும் அதன் தாயையும் மூடினார்கள்.*

*அதற்குப் பின்பு, இயேசு* ***அந்த அங்கிகள் மேல் அமர்ந்தார்.*** *கிரேக்க வசனப்பகுதியில் உண்மையில் “அவைகள் மேல்” இயேசு அமர்ந்தார் என்று சொல்லுகிறது. அப்படியானால் அவர் இரண்டு மிருகங்கள் மீதும் கால்களை அகற்றி அமர்ந்தார் என்று எடுத்துக் கொள்ளலாமா? சிலர் அப்படித்தான் நினைத்துக் கொள்கிறார்கள். மத்தேயு சகரியா 9:9ஐ “அவர் கழுதையின்* மேலும் *கழுதைக் குட்டியாகிய மறியின்* மேலும் *ஏறி வருகிறவருமாயிருக்கிறார்” என்று விளக்கப்படுத்தினார் என்று யூகிக்கிறார்கள். இப்படியாக, மத்தேயு குறிப்பிட்டு இயேசு முழுமையாக தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினதாக காட்டுகிறார், என்று சொல்லப்படுகிறது. ஆயினும், அப்படியொரு விளக்கம் அவசியமற்றது. இரண்டு விலங்குகள் மேலும் இயேசு ஏறிச் சென்றார் என்ற சொல்நடையை அவசியப்படுத்திக் காட்டுவதில்லை. அவர் கழுதைக் குட்டியின் மேல் அமர்ந்து சவாரி செய்கையில் தாய் கழுதை அதன் பக்கத்திலேயே நடந்து போய்க் கொண்டிருந்தது.*[12] *இயல்பிலும், நடைமுறையிலும் இயேசு கழுதைக் குட்டியின் மேல் மாத்திரம் தான் பயணம் பண்ணியிருக்க வேண்டும்.*

## *வரவேற்பு (21:8-11)*

***8திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்.***

***9முன் நடப்போரும் பின் நடப்போருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.***

***10அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார் என்று விசாரித்தார்கள்,***

***11அதற்கு ஜனங்கள், இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள்.***

***வசனம் 8.*** *திரளான ஜனங்கள் பெத்தானியாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றி வந்தவர்களாயிருக்க வேண்டும் அல்லது ஒலிவமலையின்மேல் அவருக்காக காத்துக் கொண்டிருந்தவர்களாயிருக்க வேண்டும். மற்றவர்கள் எருசலேமிலிருந்து அவரை சந்திக்க வந்தவர்கள், மற்றும் சிலர் பஸ்காவை*

முன்னிட்டு பட்டணத்துக்கு பக்திப் பயணிகளாய் வந்தவர்கள். மேலும் சிலர் கலிலேயாவிலிருந்து வந்தவர்களாயிருக்கலாம். இயேசு, குட்டியாகிய மறியின் மேல் பயணம் பண்ணி கூடியிருந்த **கூட்டத்தினூடே** வந்தபோது, தொழுகைக்கு வந்திருந்தவர்கள் **தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்.** வசனம் 7ல் குறிப்பிட்டபடி, அவர்களுடைய வஸ்திரங்கள் என்பது அவர்களின் மேலங்கியாகிய "தளர் அங்கிகள்" (NIV; NRSV), அதாவது அவர்களின் வெளிப்புற அங்கி. தங்கள் மேல் வஸ்திரத்தைக் கழற்றி தங்களுடைய ராஜாக்களுக்கு முன் விரிப்பது அவரது அதிகாரத்துக்கு மரியாதை செலுத்தும் பழக்கம் புராதன காலத்து வழிமுறை (2 இராஜாக்கள் 9:13), அது, "நான் என்னையே உம்முடைய கரங்களில் ஒப்புவிக்கிறேன்" என்று சொல்வதற்கு ஒப்பானது.

**மற்றவர்கள் மரக்கிளைகளைக்தறித்து வழியிலே பரப்பினார்கள்.** மாற்கு 11:8 சொல்லுகிறது, அதாவது தங்கள் "வயல்வெளிகளிலிருந்து இலைகளுடன் கூடிய கிளைகளை" பரப்பினார்கள் (NASB). யோவான் 12:13ல் குறிப்பாக, "குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு" வந்தார்கள் என்று சொல்லுகிறது. தென்னை, பனை, பேரீச்சை போன்ற புல்லின மரங்கள் புனித நிகழ்வுகளோடு நெடுங்காலமாக சம்பந்தப்பட்டு வந்துள்ளன. நியாயப்பிரமாணம் பேரீச்ச மரஓலைகளை அவர்களுடைய கூடாரப் பண்டிகையில் பயன்படுத்தும்படி கட்டளையிட்டது (லேவியராகமம் 23:40, 42; காண்க நெகேமியா 8:15). சாலொமோன் கட்டிய தேவாலயத்தில் பேரீந்துகள் காணப்பட்டன (1 இராஜாக்கள் 6:29, 32, 35), எசேக்கியேல் கண்ட புதிய ஆலயத்தைக் குறித்து தரிசனத்திலும் உள்ளன (எசேக்கியேல் 40:16-37; 41:18-20, 25, 26). பேரீச்ச மரங்கள் பழங்கால ஜெப ஆலயங்களை அது கப்பர்நகூமில் நன்கு பாதுகாக்கப்பட்ட ஜெப ஆலயம் உட்பட அலங்கரித்தது. யோவான் கண்ட பரலோகக் காட்சியில், திரளான ஜனங்கள் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம் (வெளிப்படுத்தின விசேஷம் 7:9).

பேரீச்ச மரம் தேசீய அடையாளச் சின்னமாகவும் பயன்படுத்தப்பட்டது. (பழைய புதிய) ஏற்பாடுகளுக்கு இடையிலும் புதிய ஏற்பாட்டு ஆரம்ப காலங்களிளும் ஈச்ச இலைகள் யூதர்களின் நாணயங்களில் பொறிக்கப்பட்டிருந்தன. மெக்காபியர் காலத்தில், யூதர்களின் எதிரிகள் தோற்கடிக்கப்பட்ட போது, குருத்தோலைகளை தங்களுடைய வெற்றிக் கொண்டாட்டத்தில் பயன்படுத்தினார்கள்.[13] (நாம் படித்துக் கொண்டுள்ள) இந்தக் காட்சியில் இயேசுவின் கண்ணோட்டமும் திரளான ஜனங்களின் கண்ணோட்டமும் வேறுபட்டுள்ளதைக் காண முடியும். கழுதையின் மேல் சவாரி செய்வதால் இயேசுவுக்கு எந்தவித புரட்சிகரத்திட்டமும் இல்லை என்பதை அவர் வெளிப்படுத்தினார்; திரளான ஜனக்கூட்டம் குருத்தோலைகளை கையில் பிடித்துக் கொண்டிருந்த காட்சி, மெக்காபியர்களின் வெற்றியை கொண்டாடியதற்கு ஒப்பானதாக, இன்னமும் அவரை ஒரு புரட்சிகர மேசியாவாகத்தான் பார்த்தார்கள்.[14]

**வசனம் 9. திரளான ஜனங்கள்** இயேசுவைச் சுழ்ந்து கொண்டு, ஏதோ ஒரு ராஜாவின் நகர்வலம் போல, சிலர் அவருக்கு **முன்பாகவும்**

*சிலர் அவருக்குப்* ***பின்னாகவும்*** *நடந்தார்கள். இந்த நேரத்தில் அவர்கள் சங்கீதம் 118 லிருந்து வார்த்தைகளைச் சொல்லி* ***ஆர்ப்பரித்தார்கள்.*** *இந்த சங்கீதம் துதிக்கீதங்களில் ஒன்று (113-118), இவை பஸ்கா பண்டிகையின்போது, எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து தேவனுடைய விடுதலையை கொண்டாடும்படியும் பாடப்பட்டன. இது மிகவும் குறிப்பாக மேசியாத்துவப் பாடலும் புதிய ஏற்பாட்டில் பெரும்பாலான இடங்களில் பயன்படுத்தப்பட்டதும், குறிப்பாக "பிரதான மூலைக்கல்" என்ற உருவக மொழியாகவும் பயன்படுத்தப்பட்டது (21:42; மாற்கு 12:10, 11; லூக்கா 20:17; நடபடிகள் 4:11; 1 பேதுரு 2:7).*

***ஓசன்னா*** *என்பது எபிரெயச் சொல்லின் கிரேக்க நேரடி மொழிபெயர்ப்பு. இவ்வார்த்தையின் நேரடிப்பொருள் "இப்பொழுது எங்களை இரட்சியும்" அல்லது "எங்களை இரட்சிக்கும்படி, வேண்டுகிறோம்." இது ஒரு துதியின் சொல்லாகியது. இந்த வசனப்பகுதியில் சங்கீதம் 118:25 லிருந்து வந்த வார்த்தைகள்: "கர்த்தாவே,* இரட்சியும், *என்று உம்மை வேண்டிக்கொள்கிறோம்; ஓ கர்த்தாவே, நாங்கள் உம்மை வேண்டிக் கொள்கிறோம், காரியத்தை வாய்க்கப் பண்ணும்!" (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). அந்தக் கூட்டம்* ***தாவீதின் குமாரனுக்கு*** *தங்களுடைய துதிகளைச் செலுத்தியது. பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற மேசியாத்துவ பாடலாகிய இதில், தாங்கள் எதிர்பார்த்து விடுதலையளிக்கும் இரட்சகராக இயேசு அடையாளப்படுத்தப்படுகிறார் (காண்க 1:1ன் விளக்கவுரை).*

*அந்த திரள் கூட்டம் சங்கீதம் 118:26ன் சொற்களையும் பயன்படுத்தினர்:* ***கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.*** *யூத பாரம்பரியத்தில், பண்டிகை நாட்களில் பட்டணத்துக்குள் பக்திப் பயணிகளை வரவேற்பதற்காக பயன்படும் சத்தம் இது. ஆயினும் இந்த நிகழ்வில், அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த ராஜாவை தமது ராஜ்யத்தின் திறப்பு விழாவை நடத்தப்போகிறவரை கனப்படுத்தியது (யோவான் 12:13).*[15] *கூட்டத்தினர் ராஜ்யத்தைத்தவறாகப் புரிந்து கொண்டிருந்தார்கள் என்பதற்கு சாட்சியமாக அவர்களுடைய ஆரவாரச்சத்தமே நிரூபணமாக சாட்சியளிக்கிறது, இப்பொழுது "ஓசன்னா" என்கிற அவர்கள், கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே சத்தமாய், "அவனை சிலுவையில் அறையும்" என்று சொன்னார்கள் (27:22). ஏன் இந்த மாற்றம்? மேசியாவாக அவரை சித்தரித்த அவர்களுடைய காட்சி இப்பொழுது மாறிவிட்டது.*

***வசனம் 10.*** *இயேசு* ***எருசலேம்*** *பட்டணத்துக்குள்* ***பிரவேசிக்கையில்,*** *ஜனங்களின் ஆரவாரமும் கட்டுக்கடங்கா கூட்டம் அவரைச் சூழவும் வந்த காட்சி,* ***பட்டணத்துக்குள் இருந்தவர்களை ஆச்சரியப்பட வைத்தது.***[16] *"ஆச்சரியப்பட வைத்தது" என்பதற்கு கிரேக்க வார்த்தை seiō, அதிலிருந்து ஆங்கிலத்தில் "செய்ஸ்மிக்" எனும் வார்த்தை வந்தது. இந்த வார்த்தை மத்தேயு புத்தகத்தில் வேறு இரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது: இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது "பூமியும் அதிர்ந்தது" (27:51) கல்லறையைத்திறந்த தூதர்களை பார்த்தபோது காவலர்கள் "திடுக்கிட்டு" பயந்தார்கள் (28:4). வசனம் 10ல், seiō, என்பது "அசைய வைத்தது"* (KJV), *"குழப்பமடையச் செய்தது"* (NRSV), *"வியப்பில் நிறைந்தது"* (NCV), *மற்றும் "பெரும் கூச்சலிடல்"* (TEV) *என்றுள்ளன.*

*பட்டணத்தில் இருந்தவர்கள்,* ***இவர் யார்?*** *என்று விசாரித்தனர். இயேசு தமது பெரும்பகுதி காலத்தை கலிலேயாவில் கழித்திருந்தாலும், எருசலேம் மக்களுக்கு அவர் புதியவரல்ல. யோவான் எழுதின சுவிசேஷம் அதை வெளிப்படுத்தி அவர் தமது ஊழிய நாட்களில் அநேகமுறை அங்கே போயிருப்பதைக் குறிப்பிடுகிறார் (யோவான் 2:13; 5:1; 7:10, 14; 10:22, 23; 18:20). இந்தக் கேள்வி எருசலேமில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களிடமிருந்து வந்திருக்கக் கூடும். அவர்கள் பட்டணத்துக்குள் இயேசு நுழைகிற முறையை பார்த்து அல்லது மிகுந்த கூட்டத்தால் அவரைப் பார்க்க கூடாமல் இருந்தவர்களாக இருந்திருக்கலாம். மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில் யூதமார்க்ககிரேக்ககரானவர்கள் அந்த நேரத்தில் பஸ்காவுக்கு எருசலேமுக்கு வந்திருந்தனர். இந்தக் கேள்வி அவர்களுடையதாய் இருந்திருக்கலாம். ரோம உலகின் பல இடங்களிலிருந்து பண்டிகைக்கு யூதர்கள் வந்திருந்தபடியால் (நடபடிகள் 2:5, 9-11), இந்த பக்தியாத்ரீகர்களில் சிலர் இயேசுவைக் குறித்து கேள்விப்படாது கூட இருந்திருக்கலாம்.*

***வசனம் 11. கூட்டத்தில் இருந்தவர்கள்*** *தொடர்ந்து பதில் அளித்து,* ***இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த இயேசு*** *என்றார்கள். கூட்டத்திலிருந்த இந்த ஜனங்கள் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு பண்டிகையினிமித்தம் வந்திருந்தவர்கள். அவர்களில் சிலர் இயேசுவோடும் அவருடைய சீஷரோடும் சேர்ந்து கொண்டிருந்தனர். அவர் பேசுவதைக் கேட்டும் அவர் அற்புதங்கள் செய்வதை பார்த்தும், அவர்களுடைய பகுதியில் பெருமையுடன் சந்தோஷமாய் அவரைப் புகழ்ந்து கலிலேயாவிலிருந்து வந்த தீர்க்கதரிசி என்று அவர்கள் சொன்னார்கள்.*

*இயேசு ஒரு தீர்க்கதரிசி எனும் கருத்து மத்தேயு 13:57 லும் 16:14 லிலும் காணப்படுகிறது. உண்மையில், அவர் தீர்க்கதரிசிதான் (மாற்கு 6:15; லூக்கா 7:16; 13:33; யோவான் 4:44). அவர் வருகின்ற காரியங்களை மட்டும் முன்னுரைக்கவில்லை, தேவனுடைய செய்தியையும் மனிதர்களுக்குக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சியில், ஜனங்கள் இயேசுவை "உலகத்திற்குள் வரவிருந்த (மோசேயைப் போன்ற) தீர்க்கதரிசியாய் அடையாளப்படுத்தியிருக்கக் கூடும்" (யோவான் 6:14; காண்க உபாகமம் 18:15, 18; யோவான் 7:40; நடபடிகள் 3:22; 7:37).*

*அந்தக் கூட்டம் இயேசு "நாசரேத்து" எனும் பட்டணத்திலிருந்து வந்தவர் என்றும் சொன்னார்கள் (காண்க 2:23 க்கான விளக்கவுரை). புதிய ஏற்பாட்டு நாட்களில், பெரும்பாலும் ஒருவன் அவனுடைய பெயரையும் இடத்தையும் கொண்டு குறிப்பிடப்பட்டான். "நசரேயனாகிய இயேசு" அல்லது "நாசேரத்தூரானாகிய இயேசு" எனும் பதம் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படுகிறது (26:71; மாற்கு 1:24; 10:47; 16:6; லூக்கா 4:34; 18:37; 24:19; யோவான் 1:45; 18:5, 7; நடபடிகள் 2:22; 3:6; 4:10; 6:14; 10:38; 22:8; 26:9). மத்தேயு புத்தகத்தை வாசிப்பவர்கள், இயேசு "கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து" வந்தவர் மட்டுமல்ல (21:11), யூதேயாவிலுள்ள பெத்லகேமிருந்தும் வந்தவர் என்று அறிவார்கள் (2:1).[17]*

*வெற்றிகரமான அவருடைய நுழைவைத் தொடர்ந்து, இயேசு யூத மத தலைவர்களை இன்னும் அதிகமாக (அவர்களை) நேரடியாக எதிர் கொண்டார். அடுத்து வரும் சில நாட்களில், அவருடைய அற்புதங்களும் போதனைகளும்*

அவரை பின்பற்றினோரை ஆச்சரியப்படவைத்தது மாத்திரமல்லாது, அவருடைய சத்துருக்களை நெருங்கி வரும் சிலுவையில் அறைப்படுதலை முன்னிட்டு கோபத்தை கிளறிவிட்டது.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## வெற்றிகரமான நுழைவு
## *(21:1-11)*

*எருசலேமுக்குள் வெற்றிகரமாக இயேசு நுழைந்த காட்சி அநேக முக்கியமான பாடங்களை (கருத்துக்களை) விளக்கப்படுத்துகிறது.*

*1. இயேசுவின் சர்வ ஞானம் (21:1-3). கழுதையை வாங்கி பயன்படுத்தியது முன்னேற்பாடாக செய்யப்பட்டிருக்க முடியுமென்றாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட ரீதியில் அவர் அந்த விலங்குகளை அறிவார் என்பது அதேபோல சாத்தியமானது. அப்படியானால், இன்னும் அநேக காரியங்களையும் அவருடைய தெய்வீகத்தை அடையாளப்படுத்தும் அற்புதங்களும் இந்தக்கதையில் கூட்டப்படுகிறது.*

*2. இயேசுவால் நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனம் (21:4, 5). கர்த்தர் கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்குப் போனபோது, அவர் வசனங்களை நிறைவேற்றினார் (சகரியா 9:9). பழைய ஏற்பாட்டில் உள்ளது கிறிஸ்துவுக்குள் நிறைவேறுவதை மத்தேயு திருப்பித்திருப்பி வலியுறுத்துகிறார்.*

*3. இயேசுவின் தாழ்மை (21:6, 7). உருவின பட்டயத்தை கையில் வைத்துக் கொண்டு கர்த்தர் வெள்ளைக் குதிரையின் மேல் ஏறி எருசலேமுக்குள் நுழையவில்லை - ஆகிலும் அவரால் அப்படிச் சென்றிருக்க முடியும் (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16). அவர் தாழ்மையுடன் கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறிவந்தார். அவர் ஒரு இராணுவ ரீதியான மேசியாவாக இராமல், பாடுபடும் தாசனாக அவர் வந்தார் (ஏசாயா 53).*

*4. இயேசுவின் தகுதி (பாத்திரமிக்க) தன்மை (21:8-11). கூட்டத்தில் இருந்த சிலர் தங்களுடைய வெளிப்புற மேலங்கிகளை எடுத்து வழிகளில் விரித்து கழுதையை அதன் மேல் நடந்து போகச் செய்தனர். மற்றவர்கள் மரங்களிலிருந்து கிளைகளை வெட்டி, அதே போல வழிகளில் மேல் பரப்பினார்கள். இதன் பலனாக, சிவப்புக் கம்பளங்களை ராஜாவுக்காக விரித்தார்கள். அவர்கள் சத்தமிட்டு, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று ஆர்ப்பரித்து, கர்த்தருடைய நாமத்திலே இயேசுவை ஸ்தோத்திரித்தார்கள். இயேசு உண்மையில் சகல கனத்திற்கும் துதிகளுக்கும் பாத்திரமானவர் (வெளிப்படுத்தின விசேஷம் 5:9-14).*

*5. இயேசுவைக் குறித்து ஜனங்களின் திடமற்ற புத்தி. அநேகர் அவரைத் துதித்த போதிலும், சில நாட்களிலேயே அவர்கள் அவருக்கு எதிராகத் திரும்பினர். யூத தலைவர்களின் தூண்டுதலின் பேரில், பிலாத்துவினிடத்தில், அவருடைய மரணத்தைக் கேட்டு ஆரவாரம் செய்து, "அவனைச் சிலுவையில் அறையும்" என்று சத்தமிட்டனர் (27:22, 23).*

*இயேசுவின் வெற்றிகரமான நுழைவு சில வாரங்களுக்குப் பிறகு இயேசு கிரீடம் தரிப்பிக்கப்படுவதற்கான முன்னோட்டம். அவருடைய மரணம்,*

அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின், நாற்பது நாளளவும் இயேசு தமது சீஷர்களுக்குத் தரிசனமானார் (நடபடிகள் 1:3). பிறகு அவர் பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டு (நடபடிகள் 1:9-11), பிதாவின் வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டார். அங்கே அவர் தமது இராஜ்யத்தில் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக வீற்றிருந்து ஆளுகை செய்கிறார் (நடபடிகள் 2:33-36). இப்பொழுது அவர் உலகமனைத்திலும் உள்ள விசுவாசக்கிறிஸ்தவர்களால் கனப்படுத்தப்படுகிறார்.

டேவிட் ஸ்டீவர்ட்

## குருத்தோலை ஞாயிறு (21:1-11)

குருத்தோலை ஞாயிறு என்பதை, ஈஸ்டர் பண்டிகை என்று கொண்டாடுவதற்கு முந்தின வார ஞாயிற்றுக் கிழமையன்று அநேகர் ஆசரிக்கின்றனர், இந்தப் பெயர் மத்தேயு 21, மாற்கு 11, லுக்கா 19, மற்றும் யோவான் 12ல் பதிவு செய்யப்பட்டுள்ளவைகளிலிருந்து பெறப்பட்டது. இந்த நாள் வசனங்களில் இப்படியாகக் குறிப்பிடப்படவில்லை, ஆகிலும் கிறிஸ்துவின் ஜீவியத்தோடு சம்பந்தப்படும் அநேகப் பாரம்பரியங்களில் இதுவும் ஒன்று. அந்த நாளை நாம் விழாவாக (பண்டிகையாக) கொண்டாட கேட்கப்படுவதில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும், அது எதை பிரதி நிதித்துவப் படுத்துகிறது என்பதை அறிவது பிரயோஜனப்படக்கூடும்.

---

குறிப்புகள்

[1]மற்ற வேத வல்லுனர்கள் வெற்றிகரமான நுழைவுக்குறித்து குறிப்பிடுகையில் முந்தின காலமாக (கூடாரப் பண்டிகை அல்லது ஒப்புக் கொடுத்தலின் பிரதிஷ்டை) பண்டிகையின் போது நடந்ததாக சொல்லுகின்றனர், யோவானின் சுவிசேஷம் தெளிவாக பாடுபடுதலின் (பஸ்காவின்) வாரம் என்று காட்டுகிறது (யோவான் 12:1, 12). [2]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 126. ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிலவற்றில் (KJV; ASV; RSV; NJB), நடபடிகள் 1:3ல் அவர் "பாடுபட்ட பின்பு" என்று இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் குறிப்பிட்டு பேசப்படுகிறது. [3]Ibid. [4]ஜோசிபஸ், ஒருவேளை மிகைப்படுத்திச் சொன்னாலும், பஸ்காவில் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பு, எருசலேமின் அழிவை அது நோக்கிப் போய்க் கொண்டிருந்த நாட்களில், சுமார் 27,00,200 பேர் பங்கு பெற்றிருக்கலாம் என்று குறிப்பிடுகிறார் (கி.பி. 70). அவர் அந்த நேரத்தில் பலி செலுத்திய ஆடுகளின் எண்ணிக்கையை, ஒவ்வொரு ஆட்டுக்குட்டிக்கும் சாராசரியாக பத்துபேர் எனக் கணக்கிட்டு, தமது யூகத்தின் அடிப்படையில் மதிப்பீடாகக் குறிப்பிட்டார். (Josephus *Wars* 6.9.3.) மற்றொரு நிகழ்வில், கி.பி. 65ல், பஸ்கா பண்டிகையை ஆசரிக்க முப்பது லட்சம்பேர் வருகை தந்ததாகக் குறிப்பிடுகிறார். (Josephus 2.14.3.) [5]Donald A. Hagner, *Matthew 14—28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 591. [6]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 762–63. [7]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 519. [8]Ibid. [9]மல்கியா 3:1ஐ இணைக்கும் மற்றொரு உதாரணம் மாற்கு

*1:2, 3 மற்றும் ஏசாயா 40:3ஆ "வழியை ஆயத்தம் பண்ணுங்கள்" என்ற பொதுவான சொற்றொடரை அடிப்படையாகக் கொண்டது.* [10]Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 44.

[11]Mishnah *Baba Bathra* 5.3. [12]Hagner, 595. [13]1 Maccabees 13:51; 2 Maccabees 10:7. [14]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 494. [15]Hagner, 596. *"வருகிறவர்" எனும் சொற்றொடர் மேசியாத்துவப் பாடலாக பயன்படுகிறது (3:11; 11:3ன் விளக்கவுரையைக் காண்க).* [16]*மத்தேயுவின் துவக்கத்துக்கு சமீபமாய், எருசலேம் பட்டணம் சாஸ்திரிகளின் தேடுதலால் "கலக்கமடைந்தது" (2:3). இந்த வசனப்பகுதியின் கிரேக்க வினைச் சொல்* (*tarassō*) *என்பது "கலக்கமுண்டாக்குதல்" அல்லது "ஒன்றாக குலுக்குதல்" என்ற பொருளையும் உடையது.* [17]Keener, 493.